**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.112/2018**
**DW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | ஜெகந்நாதன் |
| **Father's Name** | : | காளி |
| **Village** | : | தள்ளாம்பாடி |
| **Taluk/District** | : | கீழ்பென்னாத்தூர் |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.10.2025.
A1 and 2 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது தள்ளாம்பாடி கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்கிறேன். அது இல்லாமல் கீழ்பென்னாத்தூரில் பகுதிநேர வேலையாக மனு எழுதிக்கொடுப்பேன். வருவாய் துறை மற்றும் காவல் துறையை சேர்ந்த மனுக்களையும் நான் எழுதிக்கொடுப்பேன். நான் 15 ஆண்டுகளாக மனு எழுதிக்கொடுக்கும் வேலையை செய்து வருகிறேன். வருவாய் துறையை சம்மந்தப்பட்ட மனுக்களை எழுதிக்கொடுக்க சொன்னால் எழுதிக்கொடுப்பேன். அதேபோல் போலிசார் மனுக்களை எழுதிக்கொடுக்க சொன்னாலும் நான் எழுதிக்கொடுப்பேன். தட்டச்சு செய்யப்பட்ட புகாரையோ அல்லது எப்படி எழுதவேண்டும் என்றோ என்னிடம் கேட்டால் அதற்கு ஏற்றவாறு நான் எழுதிக்கொடுப்பேன். என்னிடம் காண்பிக்கப்படும் மணிமேகலை என்பவர் கொடுத்ததாக உள்ள அ.சா.ஆ.1 புகாரை நான்தான் கைப்பட எழுதினேன். இந்த புகாரை ஸ்டேசனில் வைத்து மணிமேகலை சொன்னதை வைத்து எழுதினேன். காவல் நிலையத்தில் மணிமேகலை என்ன சொன்னாரோ அதை வைத்து நான் எழுதினேன். அந்த சமயத்தில் போலிசார் காவல் நிலையத்தில் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அவர்கள் வேலையை பார்த்துக்கொண்டிருந்தார்கள். புகார் பகல் 12.00- 1.00 மணிக்குள் எழுதப்பட்டது. அந்த சமயத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் காவல் நிலையத்திற்கு உள்ளே இருந்தார்கள்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

இன்று நீதிமன்றத்திற்கு ஆஜர் எதிரிகள்தான் அழைத்து வந்தார்களா என்றால் இல்லை. போன வாய்தாவிற்கே அவர்கள் வரச்சொன்னார்கள். இன்று நானாகவே வந்தேன். இன்று வழக்கு விசாரணைக்கு வருகிறது என்று எதிரிகள்

போன வாய்தாவிலே சொன்னார்கள். ஒரு மனு எழுதுவதற்கு நான் எவ்வளவு காசு வாங்குவேன் என்று கேட்டால் ரூ.20 வாங்குவேன். சிலர் டீ வாங்கி கொடுத்துவிட்டு செல்வார்கள். சிலர் நன்றி சொல்லிவிட்டு செல்வார்கள். கடந்த 15 வருடங்களில் சுமார் 2000 மனுக்கள் எழுதிக்கொடுத்துள்ளேன். வழக்கின் புகாரை கீழ்பென்னாத்தூர் புது காவல் நிலையத்தில் எழுதினேன். நான் எழுதியபோது ஸ்ரீதரன் என்பவர் ஆய்வாளராக இருந்தார். புகார்தாரர் ஒருவர் புகாரை எழுதிக்கொடுக்க முடியவில்லை என்றால் போலிசாருக்கு புகார் வாக்குமூலம் பதிவு செய்யும் அதிகாரம் உள்ளது என்று எனக்கு தெரியும். நான் இந்த வழககில் காவல் நிலையத்திற்கு செல்லவும் இல்லை, அங்கு எதிரிகளை பார்க்கவும் இல்லை என்றும், தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் மணிமேகலை அழுது கொண்டு வந்து என்னிடம் சொன்னதால் நான் எழுதிக்கொடுத்தேன்.

**<u>அனுமதியுடன் எதிரிதரப்பு மறுவிசாரணை</u>**

நான் புகாரை எழுதிக்கொடுத்தபோது ஆய்வாளர் காவல் நிலையத்தில் இருந்து அவர் முன்னிலையில்தான் புகார் எழுதப்பட்டதா என்றால் அவர் அப்போது காவல் நிலையத்தில் இல்லை.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.